**மஹரகம நகர சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹரகம நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மஹரகம நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மும்மாத நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்ட ரூபா 255,000,000 நடைமுறைச் சொத்தின்கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் நீண்டகால முதலீட்டின் கீழ் காண்பிக்கப் பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படவேண்டிய ரூபா 51,916,753 தொகையும் பொருத்திகளின் கீழ் கணக்கீடு செய்ய வேண்டிய ரூபா 10,097,983 தொகையும் வீதிகள், பாலங்கள் மற்றும் மதகுகளின் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படவேண்டிய பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 4,230,450 தொகை வீதிகள், பாலம் மற்றும் மதகுகள் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நாட்குறிப்பு உறுதிச்சீட்டு இலக்கம் 45 இன் கீழ் கடந்த ஆண்டிற்குரிய வீதிகள், பாலம் மற்றும் மதகுகளை கணக்கீடு செய்யும் போது பழுதுபார்த்தல் செலவினத்திற்காக செய்யப்பட்ட ரூபா 23,742,772 தொகையும் வீதிகள், பாலங்கள் மற்றும் மதகுகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | வீதிகள், பாலங்கள் மற்றும் மதகுக் கணக்கில் 17 வீதிகளுக்குரிய ரூபா 36,129,902 பெறுமதி இரு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது சூரிய வலு சக்தி முறைமையை ஸ்தாபிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 7,104,000 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 268,355 இனால் அதிகரித்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 11,653 தொங்கல் கணக்கு தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இந்த மீதி இனங்காணப்படும் வரை தொங்கல் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | தொங்கல் கணக்கின் மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆதனங்கள், பொறிகளின் கொள்வனவு ரூபா 135,190,650 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டின் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்தல் ரூபா 2,650,273 ஆக இருந்ததுடன் இந்த தொகை முதலீட்டு செயற்பாடுகளில் இருந்தான காசுப்பாய்ச்சலில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு விடயங்களின் மீதிகளுக்குரிய உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 8,258,367 வேறுபாடு காணப்பட்டது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் நகர அபிவிருத்தி நிதிய முதலீட்டுக் கணக்கின் மீதி ரூபா 42,617,405 ஆக இருந்ததுடன் அந்த நிதிய வைப்புக் கணக்கின் மீதி ரூபா 49,478,513 ஆனமையால் ரூபா 6,861,108 வேறுபாடு காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | சபையின் கணக்குகளின் பிரகாரம் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கணக்கில் வருட இறுதியில் மீதி ரூபா 7,595,186 ஆக இருந்த போதிலும் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்தின் மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் ரூபா 7,519,316 ஆனமையால் அதற்கிடையே ரூபா 75,870 வேறுபாடு காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவையான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் கூட்டுமொத்தமாக ரூபா 8,921,623 ஆன 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மூலதன மானியங்களில் இனங்காணப்பட்ட மூலதன சொத்துக்கள் தொடர்பான விபரம் சமர்ப்பிக்கப்படாதிருந்தமையால் | -மேற்படி- | -மேற்படி- |

மீண்டெழும் அல்லாத செலவினங்களுக்காக அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றல்கள் மற்றும் அதற்கான பெறுமானத் தேய்வு தொடர்பான சரியான தன்மையை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 81,910,172 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 101,372,545 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா’ 000 | ரூபா’ 000 | ரூபா’ 000 | ரூபா’ 000 | ரூபா’ 000 | ரூபா’ 000 | ரூபா’ 000 | ரூபா’ 000 |
| (i) | ஆதன வரியும் வரியும் | **244,688** | **250,620** | **238,377** | **222,220** | **250,215** | **244,429** | **188,873** | **288,063** |
| (ii) | வாடகை | **24,545** | **24,879** | **25,168** | **11,928** | **24,082** | **23,305** | **16,799** | **12,243** |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | **600** | **473** | **473** | - | **1,500** | **1,718** | **1,718** | - |
| (iv) | ஏனைய வருமானம் | **9,200** | **8,735** | **8,755** | - | **9,770** | **7,592** | **7,565** | **1,593** |
| | மொத்தம் | **279,033** | **284,707** | **272,773** | **234,148** | **285,567** | **277,044** | **214,955** | **301,899** |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **ஆதனவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட ஆதனவரியும் வரியும் பெறுமதி ரூபா 250,619,612 ஆக இருந்த போதிலும் அதில் ரூபா 141,292,445 அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 109,327,166 தொகை அதாவது நாற்பத்தி நான்கு சதவீதம் (44%) அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்காக ஆதனங்களை தடைசெய்யும் உத்தியோகத்தர்களுக்கு நிலுவை அறிக்கை விநியோகிப்பதற்காக பிரிவுகளில் ஈடுபடுத்தி சிவப்பு அறிவித்தல் விநியோகித்து நடமாடும் சேவை நடாத்தப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2022 சனவரி 01 ஆம் திகதி வரையில் ஆதனவரி மற்றும் வரிகள் கடன்பட்டோர் மீதி ரூபா 201,659,506 ஆக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டில் ரூபா 75,276,385 அதாவது முப்பத்தேழு சதவீதம் (37%) அறவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 126,383,121 அதாவது அறுபத்தி மூன்று சதவீதம் (63%) அறவிடுவதற்கு தவறியிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் நிலுவையாகக் காணப்பட்ட ஆதனவரித் தொகையில் ரூபா 50,000 இற்கும் ரூபா 100,000 இற்கும் இடையிலான 123 ஆதனங்களிலிருந்து ரூபா 8,365,740 தொகையும், ரூபா 100,000 இற்கு மேற்பட்ட 73 ஆதனங்களிலிருந்து ரூபா 25,097,966 தொகையும் நிலுவையாக காணப்பட்டது. | ரூபா 50,000 இற்கு மேற்பட்ட நிலுவை மீதியை அறவிடுவதற்கு நிலுவைப் பட்டியல் வருமானப் பரிசோதகருக்கு வழங்கி ஆதனங்களுக்கு தனித்தனியாக நிலுவை வரி செலுத்துமாறு அறிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் சிவப்பு அறிவித்தலும் விநியோகிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **வாடகை**<br>சபைக்குச் சொந்தமான கேள்வி அடிப்படையில் வாடகைக்கு வழங்கக் கூடிய ஆதனங்களின் எண்ணிக்கை 406 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது சிட்டையிடப்பட்ட பெறுமதி ரூபா 21,188,230 ஆக இருந்த போதிலும் அதில் ரூபா 17,501,434 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **செயற்திட்டங்களை நிறைவேற்றுதல்**<br>2022 ஆம் ஆண்டில் பொது நிதியத்திலிருந்து 174 செயற்றிட்டங்கள் ரூபா 375,140,879 தொகையில் நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் வேலைகள் 101 செயற்றிட்டங்களில் மாத்திரமே வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. பூர்த்தி செய்யப்படாத 72 செயற்திட்டங்கள் காணப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 162,212,215 ஆகும். அவ்வாறே 2021 ஆம் ஆண்டில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட ரூபா 7,126,845 ஆன 03 செயற்திட்டங்கள் 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி வரையும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இரத்துச் செய்யப்பட்ட 01 செயற்திட்டம் காணப்பட்டதுடன் 72 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டமாக காணப்படுவதுடன் தற்போது 21 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் பூர்த்தி செய்யப்பட்டாத 51 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு எஞ்சியிருந்தது. | செயற்திட்டங்களை குறித்துரைத்த காலத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) **வீதிகளை கையேற்றல் மற்றும் பெயரிடல்**<br>2022 ஆம் ஆண்டில் 21 வீதிகளுக்காக பொது மக்களிடமிருந்து கிடைத்த கோரிக்கையின் அடிப்படையில் சபைக்கு கையேற்று அபிவிருத்தி செய்வதற்கு சபை தீர்மானமெடுத்திருந்த போதிலும் அவற்றைக் கையேற்று அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வீதிகளை கையேற்று அபிவிருத்தி நடவடிக்கை களைச் செய்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 ஆகஸ்ட் மாதத்தின் போது மூடப்பட்டிருந்த | மேற்கொள்ளப்பட்ட விசாரணை | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறைக் கணக்கு காசின் கீழ் ரூபா 2,052,258 பேரளவு பெறுமதியொன்று காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அது மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைக்கப்பட்டிருக்க வில்லை. | அடிப்படையாகக் கொண்டு இந்த மீதியை பதிவழிப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்காக மீண்டும் விசாரணை செய்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய இலக்கம் 4/2018 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிறுவனத்திற்கு சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் மீள்மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் நகர சபையில் மீளாய்வாண்டின் போது சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது மீள்மதிப்பீட்டிற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | மீள்மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

**3.3 தேறிய கணக்கீட்டு முறையின் கீழ் சூரிய வலுசக்தி முறைமையை ஸ்தாபித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 11 மில்லியன் செலவில் ஸ்தாபிக்கப்பட்ட சூரிய பெனல் மின்சார முறைமையின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரம் தேசிய முறைமைக்கு சேர்க்கும் 03 முறைமைகள் காணப்பட்ட போதிலும் சபையினால் மிகவும் நலன்வாய்ந்த திட்டத்தை இனம் காண்பதற்காக அந்த திட்டம் முறைமையின் கிரய நலன் பகுப்பாய்வு செய்யப்படாமல் தேறிய கணக்கீட்டு முறைமை (Net Accounting System) அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. | இது சூரிய வலுசக்தி அதிகார சபையின் மேற்பார்வையின் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இது கிரய நலன்கள் பகுப்பாய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம் கட்டிடங்களின் நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 73 காணிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 38 காணிகளை மாத்திரம் இனங்கண்டு 2022 இன் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பெறுமதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுமதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) கணக்காய்வுக்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் சபைக்குச் சொந்தமாக இனங்காணப்பட்ட 08 காணிக் கூறுகளின் சட்ட ரீதியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கான உரித்துறுதி பெறப்பட்டிருக்கவில்லை. | வெளியீட்டு உரித்துறுதியை தயாரிக்கும் செயற்பாடுகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. | உரித்துறுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சனவரி முதலாம் திகதி கையொப்பம் இடப்பட்ட வாடகை உடன்படிக்கையின் மூலம் இந்த பல்நோக்கு மாடி வாகனத் தரிப்பிடம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த வாடகை உடன்படிக்கை நிபந்தனையின் இலக்கம் 13 இன் பிரகாரம் வாகனத் தரிப்பிடத்தின் நீர் பட்டியல் மற்றும் மின்சாரப் பட்டியல் வாடகையாளரால் செலுத்த வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டிற்குரியதாக ரூபா 172,079 பெறுமதியான மின்சாரப் பட்டியல் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | சபையினால் செலுத்தப்பட்ட மின்சாரப் பட்டியலில் ரூபா 103,000 அறவிடப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் மின்சாரப் பட்டியல் அறவிடப்படல் வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இடமாற்றலாகிச் சென்ற 32 உத்தியோகத்தர்களிடமிருந்து | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை | நிலுவை கடன் மீதியை தாமதமின்றி |

| | | |
|---|---|---|
| ரூபா 1,629,348 தொகையும், மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற 14 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,340,742 தொகையும், சேவையை விட்டுச்சென்ற 23 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,140,446 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 4,110,536 கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படுகின்றது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 ஒப்பந்த நிருவாகம்
### மாகும்புர சுடலைக்கூட நிர்மாணம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 யூலை 17 ஆம் திகதிய இலக்கம் 03/2020 என்ற உள்ளூராட்சி சுற்றாடல் அமைச்சின் (மேல் மாகாணம்) சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டமாக அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டமாக இருந்த போதிலும் ஒவ்வொரு கட்டத்திற்குமுரிய விடயப் பரப்பு மற்றும் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரித்து அங்கீகாரம் பெறவேண்டி இருந்ததுடன் ஒவ்வொரு கட்டத்திற்கும் உரிய கேள்வி கோருவதற்கு அந்தக் கட்டத்திற்குரிய மதிப்பீட்டை பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மாகும்புர சுடலைக்கூட நிர்மாணத்தின் ஒப்பந்தத்தின் மொத்த கிரய மதிப்பீடு ரூபா 31,700,000 ஆக இருந்ததுடன் அந்த பணிகள் 08 ஆக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு சமூக அடிப்படையிலான 02 சங்கங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | ஒவ்வொரு கட்டத்திற்கும் உரிய விடயப் பரப்பு தயாரிக்கப்படாதிருந்தமை ஏற்றுக்கொள்கின்றோம். எனினும் மொத்த கிரய மதிப்பீட்டின் (1 அவது கட்டம் தவிர) மிகுதிக் கட்டங்களுக்காக உரிய அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் 1/2021 சுற்றறிக்கையின் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக நிர்மாணங்களை கையளிப்பதற்காக அந்தந்த கட்டத்திற்குரிய மதிப்பீடு பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிர்மாணங்களை கையளித்த சங்கம் இரண்டும் சுடலைக் கூடத்திற்குரிய பகுதியில் பதிவு செய்து செயற்பாட்டிலுள்ள சங்கங்கள் இரண்டும் ஆகும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அவ்வாறு மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் நியாயமான அறிக்கை மற்றும் சாத்தியவள அறிக்கையும் | ஏற்றுக்கொள்கின்றோம். அதன் பிரகாரம் சார்த்தியவள அறிக்கை மற்றும் நியாயமான அறிக்கை | நியாயமான அறிக்கை மற்றும் சாத்தியவள அறிக்கை சமர்ப்பிக்கப்படல் |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 06 ஆவது பிரிவின் பிரகாரம் ரூபா 4 மில்லியனுக்கு மேற்பட்ட மொத்த கிரய மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்டம் பெறுகைகள் வழிகாட்டி மற்றும் நிர்மாண கோவைகள் நிர்மாண அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) ஒப்பந்த நிபந்தனை மற்றும் மாதிரிகளின் பிரகாரம் உடன்படிக்கை செய்ய வேண்டியிருந்த போதிலும் இந்த பணிகளின் போது சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்படாதிருந்த போதிலும் அதற்காக செயற்திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பொதுச் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் கட்டமாக தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 1/2021 சுற்றறிக்கையின் பிரகாரம் சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் மூலம் நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. | வேண்டும். |